**பெல்மடுல்ல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 22 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பெல்மடுல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டிற்கான முத்திரை கட்டண குறை பில் இடல் ரூபா 3,786,571 இற்காக மற்றும் கடந்த 03 வருடங்களுக்கான நீதி மன்ற தண்டப்பணம் குறை மற்றும் மிகை பில்இடல் முறையே ரூபா 1,717,376 மற்றும் 793,291 இற்காக சீராக்கம் செய்யாமைனால் பெற வேண்டிய கணக்குகளில் மற்றும் திரண்ட நிதியத்தின் மீதி அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய சீராக்கம் செய்து கணக்குகள் சரி செய்துகொள்ள வேண்டும். | எதிர் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கடைவாடகை ரூபா 81,000 யினை குறைத்து பில் இடப்பட்டதன் காரணத்தால் செயற்பாட்டு வருமானம் அப் பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டது. | மீளாய்வாண்டிற்கான வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் 03 கணக்கு விடயங்களில் நிதி கூற்றுக்கள் பிரகாரம் மீதிகள் மற்றும் துனை பதிவேடுகள் பிரகாரம் மீதிகளின் இடையில் ரூபா 37,150,895 ஆன வித்தியாசம் நிலவியது. | இணங்காமைக்குறிய காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். | பதிவேடுகளை பரிசீலனை செய்து எதிர்காலத்ததில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2008 ஆண்டு முதல் நிலவும் ரூபா 732,322 ஆன வைப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2018 ஆண்டு முதல் நிலவின வைப்பு செலுத்தி இருப்பதை பரிசீலனை செய்து எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 06 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் உரிய முறையில் எரி பொருள் பாவனை பரிசீலனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி IV (ஆ) பகுதியின் 5(5) ஆம் துணைச் சட்டம் | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டினுள் இனங்கண்டிருந்த 15 அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றுவதற்கு அல்லது முறையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களிற்காக தொடர்புடைய ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக மகா சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், மீண்டும் தொழில்நுட்ப அலுவலர் தள பரிசீலனை மேற்கொண்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன். |
| (ஈ) | உள்ளூராட்சி நறுவனங்களில் நிலுவை வீத வரி மற்றும் ஏக்கர் வரி சேகரிக்க அலுவலர்களை ஈடுபடுத்தல் மற்றும் தரகுப் பணம் கொடுப்பது தொடர்பாக உள்ளூராட்ச்சி ஆணையாளரின் 2017 மே 11 இலக்க 5/10/2017 சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிலுவை வீத வர தொடர்பாக அறவிடப்படும் பிடியாணை கட்டணத்திற்கும் குறைவான அளவு தரகுப் பணமாக செலுத்த வேண்டிய போதும், 2015 ஜூலை முதல் மிகை கட்டணம்/பிடியாணை இல்லாமல் சேர்க்கப்பட்ட நிலுவை வீத வரிக்காக ரூபா 151,056 தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | முறையற்றதாக செலுத்தப்பட்ட கொடுப்பனவை அறவிடப்பட வேண்டும் | ஆணையாளரின் 2017 மே 11 இலக்க 5/10/2017 சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிற்கமைய எதிர்காலத்தில் நடவடிகககை எடுப்பதாக வினயமாக அறிவிக்கிறேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | 2018 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1.9 வழிகாட்டி | (i) | சங்கமொன்றின் மூலம் ஓர் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தத்தின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,000,000 இனை விஞ்சக் கூடாத போதும், 02 சங்கங்களிற்காக அவ் எல்லையை மீறி ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேலைகளை மேற்கொள்ள சங்கங்கள் பலவற்றிற்கு அறிவூட்டப்பட்ட போதும் அதற்காக வேறு எந்தவொறு சங்கமும் முன்வராதான் காரணமாக முன்வந்த இரண்டு சங்கங்களிற்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டது. |
| | | (ii) | ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கமொன்றினால் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளும் ஒப்பந்தத்தின் அளவு 03 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதும், ஒரு சங்கத்திற்கு 2018 திசெம்பர் மாதம் 04 ஒப்பந்தங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறு எந்தவொறு சங்கமும் முன்வராதான் காரணமாக மற்றும் 2018 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியாது போனால் அவ் ஒதுக்கீடு இரத்துச் செய்யப்படுவதனால் முன்வந்த ஒரே சங்கத்திற்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,068,200 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 42,938,198 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003, 2004, 2007 மற்றும் 2018 ஆண்டுகளுக்காக வங்கியின் இடப்படாத பணம், காசோலை மற்றும் அனுப்பப்பட்ட பணத்தின் கூட்டுத் தொகை ரூபா 586,385 தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வங்கியின் இடப்படாத பணம், காசோலை மற்றும் அனுப்பப்பட்ட பணம் தொடர்பாக முறையான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வங்கி இணக்கக்கூற்று தொடர்பாக 2006 ஆண்டிற்கு முன் வங்கி கூற்று பெற்றுக்கொள்வதற்கு முடியாமலிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால், அக்காலத்திற்கான கொடுக்கல வாங்கலகளை பதிவலிக்க மதிப்பிற்குரிய ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்க அங்கீகாரம் கிடைத்துள்ளது. |
| (ஆ) | 1999 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலத்திற்குரிய கூட்டுத்தொகை ரூபா 109,562 ஆன இனங்காணப்படாத | உரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை | இக் கொடுக்கல் வாங்கலகளை இனங்காண உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் |

| | | |
|---|---|---|
| வரவுகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் இனங்கண்டிருக்கவில்லை. | எடக்க வேண்டும். | உதவியை பெற்றுக் கொள்ள கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) 1993 ஆண்டு முதல் 2006 ஆண்டு வரையான காலத்தினுள் வங்கிற்கு செலவாக உள்ள கூட்டுத்தொகை ரூபா 149,734 ஆன தொகையை இனங்கண்டு காசேட்டில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடக்க வேண்டும். | |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 6,830,252 | 2,538,595 | 6,259,218 | 6,301,614 | 6,605,752 | 6,648,612 | 6,781,723 | 8,860,800 |
| (ii) | வாடகை | 2,586,000 | 825,945 | 2,019,230 | 1,922,358 | 2,078,640 | 1,855,444 | 2,071,623 | 1,402,993 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 565,500 | 2,947,167 | 715,008 | 295,155 | 464,000 | 763,880 | 737,130 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 14,136,800 | 42,423,381 | 15,450,862 | 22,093,951 | 13,172,000 | 14,175,199 | 8,901,345 | 23,273,718 |

### 2.3..2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய வீத வரி மீதி ரூபா 4,092,988 ஆன தொகைனுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலவி வரும் 674 வீத வரி அலகுகளுக்குரிய கூட்டுத் தொகை ரூபா 1,344,188 ஆன மீதி நிலவியது. | நிலுவை வீத வரி அறவிடுவதற்காக முறையான மற்றும் துரிதமான வேலைத்திட்மொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | 2018 அண்டின் வருமான பரிசோதகர் பதவிகள் இரண்டும் வெற்றிடமாக காணப்பட்டது. தற்போது புதிய வருமான பரிசோதகரொருவர் நியமனம் பெற்று வந்திருந்ததனால் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய ஏக்கர் வரி மீதி ரூபா 67,555 ஆன தொகையினுள் 05 | நிலுவை ஏக்கர் வரி அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று | 2019 ஆண்டின் போது ஏக்கர் வரி பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களை விஞ்சிய காலத்திலிருந்து நிலவும் 57 அலகுகளுக்குரிய ரூபா 55,520 ஆன மீதியொன்று காணப்பட்டது. | செயற்படுத்தப்பட வேண்டும். | ஆய்வோன்று மேற்கொள்ளப்பட்டு சரியாக இனங்கண்டதன் பின்னர் நிலுவை ஏக்கர் வரி அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | கடந்த ஆண்டிற்கான வேலை வரி ரூபா 65,680 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வேலை வரி துரிதமாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகை இவ் வருடத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2.3.3 அனுமதிப்பத்திர கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லைனுள் வேலை வரி, வியாபார வரி மற்றும் அனுமதிப்பதிர கட்டணம் அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக ஆய்வொன்று செய்து இல்லாததுடன், மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு கட்டணம் செலுத்தியிருந்த 919 வியார நிறுவனங்களுக்கு 2018 திசெம்பர் வரையும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சபையினால் இயலாமலிருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் குறித்த காலபகுதியினுள் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முறையான வேலைத்திட்டமொன்று திட்டமிட்டு செயற்பட வேண்டிமை | அதிகார எல்லையினுள் வேலை/வியாபாரங்கள் தொடர்பாக ஆய்வு நடவடிக்கை இந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்படுவதனால் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய வியாபாரங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 68 நிறுவனங்கள் அவ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாததனால் ரூபா 299,200 ஆன வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்ததுடன், குறித்த அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத வேலைகள் இனங்காணுவதற்கு வருடாந்த ஆய்வொன்று அல்லது ஏனைய முறையான ஒழுங்கொன்றை சபை பின்பற்றி இருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய சகல நிறுவனங்களுக்கும் உரிய ஏற்பாடுகள் பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளுமாறு வருமான பரிசோதகர் அறிவூட்டப்பட்டுள்ளார். |

## 2.3.4 ஏனைய வருமானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையினுள் காட்ச்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பலகை தொடர்பாக | விளம்பர பலகை தொடர்பாக ஆய்வொன்று | விளம்பர பலகை தொடர்பாக ஆய்வொன்று எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு பணம் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டினுள் ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமையினால் காட்ச்சிப்படுத்தப்பட்டுள்ள சகல விளம்பர பலகைகளுக்காக கட்டணம் அறவிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக உறுதியொன்று சபையிடம் இல்லாதிருந்தது. | மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கும் பெறப்பட வேண்டிய எல்லா வருமானமும் சேகரிக்கப்பட செயற்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | அதிகார எல்லையில் அமைந்துள்ள 03 சுற்றுலாதுறை ஹோட்டல்களிலிருந்து அவ் ஹோடல்களின் வருடாந்த வருமானத்தின் மீது அறவிடப்பட வேண்டிய 1 சதவீத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஹோட்டல்களில் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டின் போது உரிய கட்டணம் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.3.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,898,165 ஆனதுடன், 2016 ஆண்டிற்காக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 15,195,339 ஆனது. 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானங்களை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பெல்மடுல்ல நீதி மன்றத்தினால் 2018 ஜுலை முதல் திசெம்பர் வரை பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண தொகை ரூபா 1,280,250 ஆக இனங்கண்டிருந்ததுடன், அத் தொகையை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>2017, 2018 ஆண்டுகளுக்காக பொருத்தமான முத்திரைக் கட்டண அட்டவணைகள் இது வரை கிடைக்காததனால் அவ் வருடங்களுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்காணுவதற்கு முடியாமலிருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டத்தை தயாரிக்கப்பட்டு செயற்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்தகொள்ள நீண்ட கால திட்டத்தை எதிர்காலத்தில் தயாரிக்கப்பதற்கு தேவையான செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2013 ஜுன் மாதம் முதல் வெற்றிடமாக இருந்த சபை செயலாளர் பதவிக்காக 2019 ஆண்டில் பதில் கடமை அடிப்படையில் அலுவலர் ஒருவர் இணைக்கப்படடிருந்தார். சபையின் அங்கீகார வருமான பரிசோதகர் பதவி இரண்டில் ஒர் பதவி அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்தே வெற்றிடமாக இருப்பது சபையின் வருமான சேசகரிப்பு தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்தியிருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | 2019 ஏப்ரில் 01 திகதி முதல் பதில்கடமை புரியும் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஒர் வருமான பரிசோதகர் கடமை பொறுப்பேற்றுள்ளார். |
| (ஆ) | 1996 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கூட்டுத்தொகை ரூபா 148,830 ஆன நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு சபைக்கு இயலாமலிருந்தது. | நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிககை எடுக்க வேண்டியமை. | தகவல்களை கண்டறிந்துக்கொள்ள முடியுமானவர்களுக்கு கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஏனையவர்களின் தகவல்களை கண்டறிய முடியாது. இது தொடர்பாக உள்ளுராட்சி ஆணையாளர் அறிவூட்டப்பட்டுள்ளார். |

## 3.3 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கடந்த சபையில் இருந்த அங்கத்துவர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த அங்கத்துவ் கொடுப்பனவு ரூபா 16,500 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. | மிகை கொடுப்பனவு மீள் அறவிடப்பட வேண்டும் | உறுப்பினர்களுக்கு கூடுதலாக செலுத்தியிருந்த அங்கத்துவ கொடுப்பனவுவான ரூபா 16,500 ஆன தொகையை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமை

### சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1993 ஆண்டில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த எனினும் உரிமையை முறையாக சுவீகரிக்கப்படாத கெப் வண்டியொன்று பழுதுபார்க்க முடியாத அளவில் துறுப்பிடித்திருந்த போதும், அதன் உரித்துரிமை தொடர்பாக நிலவும் பிரச்சினையை தீர்த்திற்கொண்டு பராதீனம் செய்வதற்க சபையினால் இயலாமலிருந்தது. | வண்டியின் உரித்துரிமை தொடர்பாக நிலவும் பிரச்சினையை தீர்துக்கொண்டு முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டும். | குறித்த வாகனத்தை சபைக்க சுவீகரிக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் சுவீகரிப்பு இடம் பெற வில்லை. இது தொடர்பாக ஆலோசனை கோரி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.5 பெறுகை

### ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹல்கஸ்வெல்யாய அனைகட்டு புணர் நிர்மாண வேலை 2018 திசெம்பர் 31 முன், வேலை முடிவு செய்யும் ஒருமைபாட்டின் மீது 2018 திசெம்பர் 14 ஆம் திகதி கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு ரூபா 300,000 பெறுமதிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 12 திகதியளவில் | ஒப்பந்தம் பிரகாரம ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்த காலத்தினுள் வேலையை பூர்த்தி செய்ய குறித்த சங்கத்திற்கு முடியாதுள்ளது. ஏற்றுக்கொள்ள கூடிய காரணம் முன்வைக்கப்பட்டு காலத்தை நீடித்துக்கொள்ள எழுத்து மூல கோரிகை பிரதேச சபைக்கு முன்வைத்தல் குறித்த அபிவிருத்தி சங்கத்தின் |

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்த வேலைகளின் பெறுமதி ரூபா 24,921 மாத்திரமே ஆன போதும், ஒப்பந்தக்காரருக்க எதிராக ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பொறுப்பாகும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 423,604 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய வேண்டும். | தேவைபாடொன்று எற்படாமை, பணம் இல்லாமையும் செலவின ஒதுக்கீடு எஞசுவதற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 06 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 458,500 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 80 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சளவில் மீதியாக இருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீடு பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | எதிர்வரும பாதீட்டின் போது இச் செலவன விடயங்களிற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யவதனை குறைக்க குறித்துக் கொண்டேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 மார்ச் 29 ஆம் திகதி முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டுள்ளதாக வினயமாக அறியத்தருகிறேன். |